# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த முன்னேற்ற அறிக்கை
# Annual Performance Report

# 2012

සංස්කෘතික හා කලා කටයුතු අමාත්‍යාංශය
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
Ministry of Culture & the Arts

# கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

அரச நிதிச் சுற்று நிருபம் இல. 402 இன் பிரகாரம் கலாசார மற்றும் கலை அலுவல்கள் செயலாளரால் சமர்ப்பிக்கப்படுகின்ற

# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை - 2012


<u>வெளியீடு</u>
திட்டமிடல் பிரிவு
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
8 ஆம் மாடி

செத்சிரிபாய, பத்தரமுல்லை.

## கௌரவ அமைச்சரின் செய்தி



பொது மக்களின் மனதை தொடுகின்ற கலாசார விழுமியங்கள் பாரம்பரிய சொத்தாகும்.

இலங்கை தாய் நாட்டின் கலை மற்றும் கலாசார செயற்பாடுகளை கட்டியெழுப்புவதற்கான தேசிய திட்டத்தில் ஈடுபட்டு வருடாந்த முன்னேற்ற மீளுய்வு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உள்ளுர் கலை மற்றும் கலாசாரங்கள் என்பன பிறப்பின் ஊடாகவே பெற்றோரின் பாரம்பரிய சொத்தொன்றாக எமது மனதை தொடுகின்றமை முக்கியமானதாகும். இதன் காரணமாக கலாசாரம் மற்றும் கலை பற்றி இலங்கை மக்களின் உள்ளங்களில் ஆழமாக பதிந்து காணப்படுகின்றது. இவ்வாறானதொரு மக்கள் சமூகத்திலே கலாசாரம் மற்றும் கலை பணிகளுக்கு உதவக் கூடியதாக உள்ளமை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

தேசிய ரீதியில் முக்கியத்துவமிக்க பொறுப்பொன்றினை நிறைவேற்றுவதற்காக அமைச்சினூடாக இணைந்த முகாமைத்துவ முயற்சியொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதற்காக நிருவாகத் துறையில் எப்பதவி வகிப்பவராயினும் தமது கடமையின் பொறுப்புக்கள் மிகவும் மிகவும் முக்கியமானதாகும். இதனை நன்கு உணர்ந்து செயற்படும் பட்சத்தில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு நல்லாட்சியொன்றின் கீழ் வெற்றிகரமான பணிகளில் ஈடுபட முடியும். அதற்காக அனைவரதும் அர்ப்பணிப்பு பிறந்த தாய் நாட்டிற்காக தூய நோக்குடன் மேற்கொள்ளப்படுமாயின் மிகவும் பயன்வாய்ந்த அபிவிருத்தியொன்றே இடம் பெறும்.

கலாசார மறுமலர்ச்சியொன்று நாடளுவிய ரீதியில் காணப்படுகின்ற மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை மேலும் பயன்பெறச் செய்வதற்கும், புதுமையான இலங்கை தேசமொன்றை கட்டியெழுப்புவதற்கும் நீங்களும் – நாமும் மேற்கொள்ளும் இணைந்த முயற்சியானது அனைத்து வழிகளிலும் வெற்றியளிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**ரீ.பீ. ஏக்கநாயக்க**
**கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர்**

## முன்னுரை



கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் 2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையினை முன்னேற்ற குறிப்புக்களுடன் சமர்ப்பிக்கக் கிடைத்தமையானது தேசிய ரீதியில் நாம் அடைந்துவரும் வெற்றியின் ஒரு படியாகும். ஒருவரின் பிறப்பு முதல் சமூகமயப்படுத்தப்படும் வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலாசாரம் மற்றும் கலையுடன் இணைந்து செயற்பட வேண்டி ஏற்படுகின்றது. எனினும் கலாசார விழுமியங்கள் மற்றும் மரபுரிமைகள் என்பவை தொட்டுணர முடியாத பௌதீக பொருட்கள் சொத்துக்களை விடவும் பெறுமதி வாய்ந்தவையாகும். அவற்றினை சிறந்தவாறு முகாமைத்துவம் செய்து ஒரு நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் அபிமானத்திற்கும் ஏற்ற வகையில் செயற்படுகின்றமையானது எமது செயலாற்றுகையை பயன்மிக்கதாக மாற்றும்.

கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் நிருவாகம் மற்றும் நிதி, மேம்பாடு, நிர்மாணம், வெளிநாட்டு, ஊடகம், திட்டமிடல், உள்ளகக் கணக்காய்வு ஆகிய பிரிவுகளின் பங்களிப்புடன் செயற்படுத்தப்படுகின்ற அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பன தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றன. உள்ளூர் கலாசாரத்திற்கு புத்துயிரூட்டக் கூடிய வகையில் தயாரிக்கப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் நவீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப எண்ணக்கருக்களுக்கு உட்பட்ட வகையில் தயாரிக்கப்படுகின்றன. எனினும் உள்ளூர் கலாசார விழுமியங்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு திட்டமிட்ட வகையில் அவற்றினை அமுல்படுத்த வேண்டியமை எம்மனைவரதும் பொறுப்பாகும்.

எமது அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஏனைய திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களான கலாசார அலுவல்கள் திணைக்களம், டவர் ஹோல் தியேட்டர் மன்றம் மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பவற்றின் மூலம் தனித்தனியாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் பகிரங்க நடன கட்டுப்பாட்டுச் சபையானது வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்காமையினால் அதன் 2012 வருடாந்த செயலாற்றுகையும் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது அமைச்சின் எதிர்கால செயற்பாடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கான பக்கபலமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**வசந்த ஏக்கநாயக்க**
**செயலாளர்**
**கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு**

## கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
## கிர்வாக அறிக்கை - 2012

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் தொடர்புப்பட்ட பிரிவுகளால் 2012 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டு அறிக்கையில் உட்படுவதோடு தொடர்புப்பட்ட பிரிவுகளின் நிதிசார் மற்றும் பௌதிகத்துறை வளர்ச்சி, சேவையணி, வருடாந்த பயிற்சிப் பட்டறைகள் போன்ற தகவல்களை உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ் அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களில் இருந்து வெவ்வேறாக செயற்பாட்டு அறிக்கைகள் அமைக்கப்படுவதால் இந் நிர்வாக அறிக்கைக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு 2012 ஆம் வருடம் முழுதும் மேற்கொள்ளப்பட்ட செயற்பணிகள் மாத்திரமே உட்பட்டிருப்பதை தயவுடன் கவனத்திற்குக் கொள்ளவும்.

# கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2012

**உள்ளடக்கம்** **பக்க இல.**


**1. கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு** 08

1.1 நோக்கு, செயற்பணி, குறிக்கோள்

1.2 கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு – ஒழுங்குக் கட்டமைப்பு

**2. நிர்வாக அலுவல்கள்** 10

2.1 பிரதான அதிகாரிகள் - 2012

2.2 2012.12.31 ஆம் திகதியன்று அமைச்சின் பதவியணியினர்

2.2.1 உயர் மட்ட உத்தியோகத்தர் குழாம

2.2.2 இரண்டாம் நிலையைச் சேர்ந்த பதவியணியினர

2.2.3 மூன்றாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்

2.2.4 ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்

2.3 அமைச்சு உத்தியோகத்தர்களை உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்கச் செய்தல்

2.4 2012 ஆம் ஆண்டிலே அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

2.4.1 இடமாற்றங்கள்

2.4.2 ஓய்வு பெறல்

**2.a. கலாசார மத்திய நிலையங்களின் நிருவாகம்** 14

2.a.I பொறுப்புக்கள்

**3. நிதி அலுவல்கள்** 15

3.1 கலாசார அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய செலவினம்

3.1.1 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம்

3.1.2 மீண்டுவரும் செலவினம் பற்றிய விபரம்

3.1.3 மூலதனச் செலவினம் பற்றிய விபரம்

3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்குடன் தொடர்புடைய விபரங்கள்

**4. கலாசார மேம்பாடு** 19

4.1 கலாசார மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்புக்கள்

4.2 கலாசார மேம்பாட்டுப் பணிகள்

4.3 கலாசார நிலைய நிகழ்ச்சித் திட்டங்கள்

4.3.1 கலாசார நிலையங்களினால் இலவசமாக பயிற்சியளிக்கப்படுகின்ற கலை மற்றும் ஏனைய பாடநெறிகள்

4.3.2 கலாசார நிலையங்களினால் தமது பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் நலன்கருதி நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

4.3.3 தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள்/ விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிற்குப் பெற்றுக் கொடுக்க கூடிய நடனம் மற்றும் நடனக் கலைஞர்

4.4 அங்கம் போரிடல் கலையினை வியாபித்தல்

4.5 வேடர்களின் கலாசாரத்தை பேணி பாதுகாப்பதற்கான கருத்திட்டம்

4.6 கிராமிய இசைப் பாதுகாப்பு நூலகம்

4.6.1 ஒலி மற்றும் ஒளி அமைப்புக்களின் வளர்ச்சி - (2012)

4.7 2012 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

4.8 இரசனையான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

4.9 கலாசார மேம்பாட்டு பிரிவினால் நடாத்தப்பட்ட பிற வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

4.10 நிதி முன்னேற்றம் - 2012

4.11 அமைச்சின் இணையத்தளத்தை நவீனமயப்படுத்தல்

4.12 யுனெஸ்கோ செயலமர்வு

4.13 அலுவலக விடயங்கள்

**5. கலாசார அடிப்படை வசதிகள் மேம்பாடு** **30**

5.1 பொறுப்புக்கள்

5.2 நிதி முன்னேற்றம்

5.3 புதிய கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் - 2012

5.4 உள்ளூர் நிதியங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏனைய கருத்திட்டங்கள்

5.4.1 கலாசார நிலையங்கள் மற்றும் சுனாமி ஆராய்ச்சி நிறுவனங்களை நிர்மாணித்தல் - ஹிக்கடுவை

5.4.2 சார்க் கலாசார நிலையம் - மாத்தறை, நாவிமன, மொரகெட்டியஹேன

5.4.3 வேயாங்கொடை தேசிய கலாசார பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல்

**6. வெளிநாட்டு கலாசார தொடர்பாடல்** **35**

6.1 கடமைகள்

6.2 வெளிநாட்டுப் பயணங்கள் 2012

6.3 வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள்/ பிற விசேட குழுக்கள் என்பன இலங்கைக்கு வருதல் - 2012

6.4 கலாசார புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொள்ளல் - 2012

**7. வழங்கல் மற்றும் பெறுகை** **39**

7.1 பெறுகைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பொறுப்புக்கள்

7.2 கடமைகள் - 2012

9.2.1 கலாசார நிலையங்களுக்கு பொருட்கள்/ சேவைகளை வழங்குதல்

9.2.2 அமைச்சிற்கு பொருட்கள்/ சேவைகளை வழங்குதல்

**8. உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள்** **40**

8.1 நிறுவுவதற்கான நோக்கம்

8.2 கடமைகள்

8.3 2012 இல் மேற்கொண்ட பணிகள்

**9. பகிரங்க நடன கட்டுப்பாட்டுச் சபை** **42**

9.1 ஏற்பாடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் - 2012

9.2 பதவியணி – 2012

9.3 முன்னேற்றம் - 2012

9.3.1 2012 ஜனவரி 01 – டிசெம்பர் 31 திகதி வரை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காக பகிரங்க நடன கட்டுப்பாட்டு சபையினால் பரிசீலனை செய்யப்பட்ட படைப்புக்கள்

9.3.3 2010 - 2012 வரை உழைத்துள்ள அரச வருமானம்

9.3.4 தொடர்ச்சியான சேவைகள்

# 1. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

## 1.1 தொலை நோக்கு, பணிப்பிரகடனம், குறிக்கோள்

### நோக்கு

எதிர்காலத்தின் நிமித்தம் தேசத்தின் அபிமானம் மற்றும் முதற்தர கலாசார மரபுரிமைகள் என்பவற்றினை பாதுகாப்பதற்கு அர்ப்பணித்த பெருமைமிக்கதோர் இலங்கை தேசம்.

### செயற்பணி

தமது முழு அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேம்படுத்தும் ஒரு நாடாக ஏனைய உலக நாடுகளுடன் முன்னோக்கிப் பயணிக்கும் பொருட்டு இலங்கைக் கலாசாரத்தின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் விளம்பரம் என்பவற்றிற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

### குறிக்கோள்

ஒரு நாட்டின் கலாசாரம் அந் நாட்டு மக்களை சுபீட்சப் படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படும் சகல நிகழ்சிகளை மிகவும் பயனுடையதாக நிறைவேற்றிக் கொள்வதில் உதவுகின்ற, மக்களின் அசைவுகளை வழிநடாத்தும் முக்கிய கருவியாகக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளது.

- நாட்டின் பொது தேசிய அபிவிருத்தி கொள்கையை வெற்றிக்கரமானதாக அமைத்துக்கொள்வதற்கு காரணமாகும் வண்ணம் மக்களை சுயமாக வழிநடாத்தும் சிறப்பான கலாசார சூழலை நாட்டினுள் ஏற்படுத்தல்.
- இலங்கையின் பல்லின நிலையை ஏற்று, அதன் ஒவ்வொரு உப கலாசாரங்கள் சார்ந்த இனஉறுதியை பாதுகாத்திடும் அதே சமயம் அனைத்து உப கலாசாரங்களை ஒன்றாகக் கொண்டு இலங்கைக்கான பெரு கலாசாரத்துடன் கூடிய ஒரு நாடாக முன்னெடுத்துச் செல்வதும் பலதரப்பட்ட சக்திகளால் அழிவடைகின்ற பெருமதியான கலாசார அம்சங்களை, அதுபோன்ற அழிவுகளிலிருந்து தடுத்து நிருத்திக்கொள்வதும்.
- கலாசார மரபுரைகளை அழியாது பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் உபயோகித்தல் ஊடாக நாட்டு மக்கள் வாழ்க்கையில் கலாசாரம் சார்ந்த பாவனைகளை ஒழுங்கமைத்துக் கொள்வதில் வழிவகித்தல்.
- பெருமதி மிகுந்த கலாசார அம்சங்களை, இனம்காணுவதற்கு மற்றும் அதனை தமது வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வதில் மக்களுக்கு ஊக்கமளித்தல் மற்றும் அதனூடாக இலங்கை தடம் பதியும் வகையில் கலாசாரத்தை நிர்மாணித்தல்.
- கலாசார அழிவுக்கு காரணமாகின்ற உள் மற்றும் வெளி காரணிகளை இனங்காணுவதில் மற்றும் அவற்றை புறக்கணிக்கக் கூழய மனநிலையை மக்களிடம் ஏற்படுத்தல்.
- தேசப்பற்றுடைய சிந்தனையை முன்நிறுத்தி அதன் மூலம் அபிவிருதி காண் இலக்கை நோக்கிப் பயணிக்கக் கூடிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

# 1.2 கலை மற்றும் கலாசார அமைச்சு – நிருவாக



# 2. நிர்வாக அலுவல்கள்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் அனைத்து நிறுவனங்கள் மற்றும் நிர்வாகம்சார் அலுவல்கள் நடைமுறைப்படுத்துவதும் அதனை வழிநடத்திச் செல்வதும் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.1 பிரதான சேவையணி 2012

| | | பதவிப் பெயர் | உத்தியோகத்தரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | | அமைச்சு செயலாளர் | திரு. விமல் ரூபசிங்க<br>திரு. வசந்த ஏக்கநாயக்க – 2012 ஜூலை 16 முதல் |
| 2. | I | மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு) | திருமதி. எச்.டி.எஸ். மல்காந்தி |
| | II | மெலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி, வெளிநாடு, நிர்மாணம்) | திரு. என்.பீ.வீ.சீ. பியதிலக |
| 3. | | பிரதான கணக்காளர் | திரு.சீ.வீரசிங்க |
| 4. | | பணிப்பாளர் (திட்டமிடல்) | திருமதி. கே.டபிள்யூ.எஸ்.பீ. அதுகோராள |
| 5. | I | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கலாசார மேம்பாடு) | திருமதி. டபிள. சுனீதா குரே |
| | II | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கலாசார மேம்பாட்டு / கலாசார நிலையங்கள் நிர்வாகம்) | திருமதி. ஏ.டீ.ஆர்.எஸ்.அதபத்து |
| 6. | I | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | திரு. கே.கே.ஜி. சிசிர குமார |
| | II | கணக்காளர் (கொடுப்பனவு) | திருமதி. எஸ்.டபிள்யு. குணவர்தன |
| | III | கணக்காளர் (விநியோகம்) | திருமதி. டீ.டீ.சீ. செனெவிரத்ன |
| 7. | I | உதவிச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி ∴ வெளிநாடு ∴ நிர்மாணத்துறை) | திரு. வஜிர ரத்நாயக்க |
| | II | உதவிச் செயலாளர் (நிர்வாகம், மத்திய நிலைய நிர்வாகம்) | திருமதி. பீ.ஏ.ஐ. பியுமி |
| | III | உதவிச் செயலாளர் (வெளிநாடு, போக்குவரத்து, நிர்மானிப்பு) | திருமதி. டீ. லியனகே |
| 8. | | நிர்வாக உத்தியோகத்தர் (ப.க.) | திரு. ஆர்.ஏ.டபிள்யூ.பெரேரா |

## 2.2. 2012.12.31 திகதிக்கு அமைச்சின் பணியணியினர் தொகை

### 2.2.1. உயர் மட்ட உத்தியோகத்தர் குழாம்

| பதவி | சேவை | தரம் / வகுப்பு | சம்பள குறியீடு | சேவை மட்டம் | அனுமதித்த | | | தற்போதுள்ள | | | *ஏனையவை* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தர | தற்காலிக | ஒப்பந்த | நிரந்தர | தற்காலிக | ஒப்பந்த | |
| செயலாளர் | இ.நி.சே. | விசேட | SL.4 | 1 | 01 | - | - | 01 | - | - | |
| மேலதிகச் செயலாளர் | இ.நி.சே. | விசேட | SL.3 | 1 | 02 | - | - | 02 | - | - | |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | I | SL.1 | 1 | 02 | - | - | 02 | - | - | |
| பிரதான கணக்காளர் | இ.நி.சே. | I | SL.1 | 1 | 01 | - | - | 01 | - | - | |
| பணிப்பாளர் | இ.நி.சே. | விசேட | SL.1 | 1 | 01 | - | - | 01 | - | - | |
| உதவிச் செயலாளர் | இ.நி.சே. | III | SL.1 | 1 | 02 | - | - | 02 | - | - | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே. | II/III | SL.1 | 1 | 01 | - | - | 01 | - | - | |
| கணக்காளர் | இ.நி.சே. | I | SL.1 | 1 | 02 | - | - | 02 | - | - | |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ.நி.சே. | I | SL.1 | 1 | 01 | - | - | 01 | - | - | |
| பொறியியலாளர் | இ.நி.சே. | II/III | SL.1 | 1 | 01 | - | - | - | - | - | வெற்றிடம |
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | **14** | | | **13** | | | |

### 2.2.2. இரண்டாம் நிலையைச் சேர்ந்த பதவியணியினர

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே. | விசேட தரம் | MN.7 | 02 | 01 | - | - | பதில். 01 | - | - | வெற்றிடம் 01 |
| செயலாளரின் அந்தரங்கச் செயலாளர் | தற்காலிக | - | - | 02 | 01 | - | - | 01 | - | - | |
| மொழிபெயர்ப்பாளர் | மொழி பெயர்ப்பாளர் சேவை | - | MN.6 | 02 | 02 | - | - | 01 | - | - | வெற்றிடம் 01 |
| இரண்டாம் நிலை | | | | | **04** | | | **02** | | | |

### 2.2.3. மூன்றாம் நிலையைச் சேர்ந்த பதவியணியினர்

| பதவி | சேவை | தரம் / வகுப்பு | சம்பள குறியீடு | சேவை மட்டம் | *அனுமதித்த* | | | *தற்போதுள்ள* | | | *பிற* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தர | தற்காலிக | ஒப்பந்த | நிரந்தர | தற்காலிக | ஒப்பந்த | |
| வரவு செலவுத் திட்ட உதவியாளர் | துறைசார் உத்தியோகத்தர் | - | MN.4 | 03 | **01** | - | - | **01** | - | - | |
| கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் | அதே | | MN.4 | **03** | 201 | - | - | 191 | - | - | வெற்றிடம் 10 |
| அபிவிருத்தி உதவியாளர் | அதே | - | MN.4 | 03 | 04 | - | - | 04 | - | - | |
| சட்ட உதவியாளர் | அதே | | MN.4 | 03 | 01 | - | - | 01 | - | - | |
| நூலக உதவியாளர் | அதே | | MN.4 | 03 | 01 | - | - | 01 | - | - | |
| ஆராய்ச்சி உதவியாளர் | அதே | | MN.4 | 03 | 01 | - | - | 01 | - | - | |
| கணக்கு உதவியாளர் | அதே | | MN.4 | 03 | 01 | - | - | 01 | - | - | |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | அதே | | MN.4 | 03 | 01 | - | - | - | - | - | வெற்றிடம் 01 |
| ஊடக உதவியாளர் | வெற்றிடம் 10 | | MN.4 | 03 | 02 | - | - | - | - | - | வெற்றிடம் 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | I/II/III | MN.2 | 03 | 55 | - | - | 50 | - | - | வெற்றிடம் 05 |
| உதவி கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் | திணைக்கள சார் | | MN.**1** | **03** | 180 | - | - | 160 | - | - | வெற்றிடம் 20 |
| வீடியோ கெமரா இயக்குநர் | தற்காலிக | | - | 03 | 01 | - | - | 01 | - | - | ம.க.நி. உடன் இணைக்கப்பட்டுள்ளது |
| படபிடிப்பாளர் | வெற்றிடம் 10 | | - | 03 | 01 | - | - | 01 | - | - | ம.க.நி. உடன் இணைக்கப்பட்டுள்ளது |
| மூன்றாம் நிலை | | | | **450** | | | | **410** | | | |

### 2.2.4. ஆரம்ப நிலை பதவியணி

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாரதி | இணைந்த சேவை | | | 4 | 19 | - | - | 19 | - | - | |
| அலுவலக உதவியாளர் | அதே | | | 4 | 20 | - | - | 16 | - | - | வெற்றிடம 04 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்கள சார் | | | 4 | 01 | - | - | 01 | - | - | - |
| கலாசார நிலைய அ.உ. | திணைக்கள சார் | | | 4 | 180 | - | - | 149 | - | - | வெற்றிடம 31 |
| கலாசார நிலைய காவலாளி | திணைக்கள சார் | | | 4 | 180 | - | - | 148 | - | - | வெற்றிடம 32 |
| வீடியோ உதவியாளர் | தற்காலிக | | | 4 | 01 | - | - | - | - | - | வெற்றிடம 01 |
| ஆரம்ப நிலை | | | | | **869** | | | **758** | | | |

## 2.3 அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான உள்நாட்டு பயிற்சிகள்

**2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பயிற்சிகள்**

| | பயிற்சிகளின் விபரம் | கலந்துகொண்டோர் |
|---|---|---|
| **01** | அரச கரும மொழிகள் திணைக்களம்- ஆங்கிலம் தமிழ் | 28 |
| **02** | தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபையின் பாடநெறி | 03 |
| **03** | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பாடநெறிகள் | 06 |
| **04** | அரச சேவைகள் பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிகள் | 07 |
| **05** | அமைச்சு உத்தியொகத்தர்களின் (நிர்வாகப் பிரிவின் தலைமையில்) | 86 |

## 2.4 2012 ஆம் ஆண்டு அமைச்சிலிருந்து இடமாற்றங்கள் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

### 2.4.1 இடமாற்றங்கள்

| | பெயர் | சேவை |
|---|---|---|
| 01 | திருமதி.ஜீ. கமகே | இ.நி.சே.1 |
| 02 | திருமதி.எம்.என். ரதஜபக்ஷ | இ.நி..சே.11 |
| 03 | திருமதி. பீ.எஸ். குமுதினி | அ.மு.சே.11 |
| 04 | திருமதி. ஆர்.பி.ரஞ்சனி | அ.மு.சே.1 |
| 05 | திருமதி.ஜே.ஜீ.சிரியாலதா | அ.மு.சே.1 |
| 06 | திரு. கிர்த்தி பனாகொட | கா.க.சே |
| 07 | திரு. திஸ்ஸ குமாரநாயக்க | கா.க.செ |
| 08 | திரு. பிமல் ரோஹித | கா.க.சே |

### 2.4.2 இளைப்பாறல்

| | பெயர் | சேவை |
|---|---|---|
| 01 | திரு. எம்.பீ.டீ. சந்திரிரி | சாரதி |
| 02 | திரு. கேடீ.எஸ். குடாரத்ன | சாரதி |
| 03 | திரு..டீ.டீ. தரிஜு | கா.க.சே. |

# 2.a கலாசார மத்திய நிலையங்களின் நிருவாகம்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் சகல கலாசார மத்திய நிலையங்களின் நிர்வாக அலுவல்கள் அமுல்படுத்தலும் அவற்றின் கண்காணிப்பும் மத்திய நிலைய நிர்வாகப் பிரிவினரால் மேற்கொள்ளப்படுகிறது.

### கலாசார மத்திய நிலைய செயற்குழு

I. கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்
II. உதவி கலாசார மேம்பாட்டு உத்திொகத்தர்
III. மத்தியநிலைய காரியாலய கனிஷ்ட சேவையாளர்
IV. மத்தியநிலைய வாச்சர்
V. அமைய காரியால கனிஸ்ட சேவாளர்(கா.க.சே.இல்லாத மத்திய நிலையங்களில்)
VI. அமைய வாச்சர்(மத்தியநிலைய வாச்சர் இல்லாத பட்சத்தில்)
VII. பதில் வாச்சர்(மத்தியநிலைய வாச்சர் விடுமுறை செல்லும் தனங்களில்)

### 2.a.1. கடமைகள்

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள I இலிருந்து IV பதவிகளுக்குரிய தனிவழிக்கோவைகள் பராமரித்தலும் பேணுதலும் (கோவைகளின் எண்ணிக்கை)
   a. தற்காலிக பதவியினரின் வாச்சர் கா.க.சே. ஆகியோரின் தனிவழிக்கோவைகள் வழிநடத்தல்.
   b. கலாசார மத்திய நிலையங்களின் தேவைகளைப் பொறுத்து பதில் கடமையில் ஈடுபடுத்தல்.
2. கலாசார மத்தியநிலையங்களின் லீவு சம்பந்தமான சகல விடயங்களும் மேற்கொள்ளல்.
   a. வெளிநாடுகளுக்கான கடமை லீவு மற்றும் தனிப்பட்ட லீவு தொடர்பான விடயங்கள்.
   b. சுகயீன, பிரசவ, அரை நாள், சம்பளமற்ற லீவு போன்றவற்றிற்கான செயற்பாடுகள்.

### 3. மத்தியநிலைய பணியணியினரின் கடன் தொடர்பான அலுவல்கள்

a. இடர் கடன்
b. சொத்துக்கள் கடன்
c. உற்சவ மற்பணக் கடன்
d. விஷேட முற்பணக் கடன்

### 4. கலாசார மத்தியநிலைய உத்தியோகத்தரின் வருடாந்த இடமாற்றங்கள்

எல்லா வருடமும் சகல பதவியினரினதும் இடமாற்றங்கள், இடமாற்ற சபையினால் நடைபெறுகிறது. ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக, ஒத்துமாறுதல் காரணமாக மற்றும் அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இதனால் வருடம் முழுதும் இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறன.

**5.** அக்ரஹார கர்புறுதித் திட்டம் அமுல்படுத்தல்

6. ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

7. பணியணியினருக்கான அடையாள அட்டை விநியோகம்

8. பணியணியினருக்கான திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்துதல்

9. ஆட்சேர்ப்பு தொடர்பான சகல விடயங்களும் மெற்கொள்ளல்

# 3. 2012 நிதிசார் அலுவல்கள்

## 3.1 கலாசார அமைச்சின் வேலைத்திட்டங்களுக்கான செலவினம்

### 3.1.1 மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினங்கள்

| இல. | விபரம் | 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் | 2012.12.31 ஆம் திகதிக்கான செலவினம் - ரூபா | செலவின வீதம் மூ |
|---|---|---|---|---|
| 01 | **மீண்டுவரும் செலவினம்** | | | |
| 1.1 | அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு நிர்வாகம் | 111,190,000.00 | 106,431,434.93 | 96 |
| 1.2 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 419,370,000.00 | 384,358,350.68 | 92 |
| | **மொத்தம்.** | **530,560,000.00** | **490,789,785.61** | 92 |
| 2 | **மூலதன செலவினங்கள்** | | | |
| 2. 1 | அமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சு நிர்வாகம் | 32,750,000.00 | 23,384,115.50 | 71 |
| 2. 2 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 515,015,000.00 | 355,828,697.28 | 69 |
| | **மொத்தம்** | **547,765,000.00** | **379,212,812.78** | **69** |
| | **முழுமொத்தம்** | **1,078,325,000.00** | **870,002,598.39** | **81** |

### 3.1.2. மீண்டுவரும் செலவீன விபரங்கள்

- **சேவையாளர் சம்பளங்கள் தொடர்பான செலவினம் மற்றும் சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு.**

| செலவின விடயம் | விபரம் | 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் ரூபா | 2012.12.31 ஆம் திகதிக்கு செலவீனம் ரூபா | செலவு வீதம் % |
|---|---|---|---|---|
| **சேவையாளர் சம்பளம் தொடர்பான செலவினம்** | | | | |
| 177-1-1-1001 | அமைச்சர் அலுவலகம் | 5,100,000.00 | 5,100,000.00 | 100 |
| 177-1-2-1001 | அமைச்சு நிர்வாகம் | 29,000,000.00 | 28,186,296.15 | 97 |
| 177-2-3-1001 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 114,400,000.00 | 110,791,403.42 | 97 |
| | **உப மொத்தம்** | **148,500,000.00** | **144,077,699.57** | 97 |
| **சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள்.** | | | | |
| 197-1-1-1003 | அமைச்சர் அலுவலகம் | 2,100,000.00 | 2,100,000.00 | 100 |
| 177-1-2-1003 | அமைச்சு நிர்வாகம் | 14,200,000.00 | 13,969,598.96 | 98 |
| 177-2-3-1003 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 63,400,000.00 | 61,271,015.32 | 97 |
| | **உப மொத்தம்** | **79,700,000.00** | **77,340,614.28** | **97** |
| | **முழு மொத்தம்** | 228,200,000.0 | 221,418,313.85 | 97 |

➢ ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்

| செலவினத் தலைப்பு | விபரம் | 2012 ஆம் ஆண்டிற்குரிய ஏற்பாடு ரூ. | 2012.12.31 ஆம் திகதியன்று செலவு ரூ. | செலவின வீதம் % |
|---|---|---|---|---|
| **பிரயாணச் செலவினம்** | | | | |
| | அமைச்சு அலுவலகம் | 1,500,000.00 | 1,462,326.00 | 97 |
| | அமைச்சு நிருவாகம் | 1,500,000.00 | 1,401,518.53 | 93 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்புப் பணிகள் | 3,500,000.00 | 3,497,800.00 | 100 |
| | **உப மொத்தம்** | **6,500,000.00** | **6,361,644.53** | 98 |
| **வழங்கல்** | | | | |
| | அமைச்சு அலுவலகம் | 6,066,000.00 | 5,534,881.86 | 91 |
| | அமைச்சு நிருவாகம் | 4,900,000.00 | 4,898,219.50 | 100 |
| | கலாசார மேம்பாட்டுப் பணிகள் | 8,050,000.00 | 7,466,242.91 | 93 |
| | **உப மொத்தம்** | **19,016,000.00** | **17,899,344.27** | **94** |
| **பராமரிப்பு செலவினம்** | | | | |
| | அமைச்சு அலுவலகம் | 2,400,000.00 | 1,519,409.29 | 63 |
| | அமைச்சு நிருவாகம் | 3,764,000.00 | 3,514,661.76 | 93 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்புப் பணிகள் | 1,500,000.00 | 1,176,832.40 | 78 |
| | **உப மொத்தம்** | **7,664,000.00** | **6,210,903.45** | **81** |
| **சேவைகள்** | | | | |
| | அமைச்சு அலுவலகம் | 3,950,000.00 | 3,798,572.79 | 96 |
| | அமைச்சு நிருவாகம் | 33,510,000.00 | 31,745,950.09 | 95 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்புப் பணிகள் | 7,200,000.00 | 7,167,027.79 | 100 |
| | **உப மொத்தம்** | **44,660,000.00** | **42,711,550.67** | **96** |
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஆதணக் கடன் வட்டி** | | | | |
| | அமைச்சு நிருவாகம் | 1,000,000.00 | 1,000,000.00 | 100 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்புப் பணிகள் | 800,000.00 | 800,000.00 | 100 |
| | **உப மொத்தம்** | **1,800,000.00** | **1,800,000.00** | **100** |
| | வெளிநாட்டு உறவுகள் | 10,000,000.00 | 9,974,009.00 | 100 |
| | தேசிய சாகித்திய கலை விழா | 4,500,000.00 | 4,500,000.00 | 100 |
| | சமூக ஒருங்கிணைப்பு | 5,000,000.00 | 5,000,000.00 | 100 |
| | பகிரங்க நடன கட்டுப்பாட்டு சபை | 3,800,000.00 | 3,609,710.70 | 95 |
| | டவர் ஹோல் டியேட்டர் மன்றம் | 34,000,000.00 | 26,500,000.00 | 78 |
| | மத்திய கலாசார நிதியம் | 27,000,000.00 | 15,000,000.00 | 56 |
| | சார்க் கலாசார நிலையத்திற்கான அங்கத்துவ நிதி | 22,570,000.00 | 15,000,000.00 | 66 |
| | அரச நிறுவனங்களில் கலாசார பணிகளை மேம்படுத்தல் | 1,100,000.00 | 1,100,000.00 | 100 |
| | தம்பானை நீர் மரபுரிமை நிலையத்தை பராமரித்தல் | 1,300,000.00 | 971,035.36 | 75 |
| | கலாசார நிலையங்களை பராமரித்தல் | 100,000,000.00 | 99,879,773.78 | 100 |
| | இலங்கை கலை மன்றம் | 4,250,000.00 | 3,553,500.00 | 84 |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **288,910,000.00** | **256,517,971.76** | **89** |

### 3.1.3. மூலதன செலவனம்

- **தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும்.**

| செலவனத் தலைப்பு | விபரங்கள் | 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் ரூபா | 2012.12.31 ஆம் திகதிக்கு செலவீனம் ரூபா | செலவு வீதம் % |
|---|---|---|---|---|
| **தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.** | | | | |
| 177-1-1-2102 | அமைச்சர் அலுவலகம் | 1,000,000.00 | 706,098.60 | 71 |
| 177-1-2-2102 | அமைச்சு நிர்வாகம் | 1,000,000.00 | 927,495.17 | 93 |
| 177-2-3-2102 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 25,000,000.00 | 23,119,491.33 | 92 |
| | **உப மொத்தம்** | **27,000,000.00** | **24,753,085.10** | 92 |
| **இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல்** | | | | |
| 177-1-1-2103 | அமைச்சர் அலுவலகம் | 1,000,000.00 | 1,000,000.00 | 100 |
| 177-1-2-203 | அமைச்சு நிர்வாகம் | 2,407,000.00 | 2,,349,295.20 | 98 |
| 177-2-3-2103 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 2,000,000.00 | 1,499,330.00 | 75 |
| | **மொத்தம்** | 5,407,000.00 | **4,848,625.20** | **90** |
| | **முழு மொத்தம்** | **32,407,000.00** | **29,601,710.30** | **91** |

- **இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், வாகனங்களின் திருத்த வேலைகளுக்கான செலவினத் தொகை**

| செலவினத் தலைப்பு | விபரங்கள் | 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் ரூபா | 2012.12.31 ஆம் திகதிக்கு செலவீனம் ரூபா | செலவு வீதம் % |
|---|---|---|---|---|
| **இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் புதுப்பித்தல் தொடர்பான செலவீனத் தொகை** | | | | |
| 177-1-1-2002 | அமைச்சர் அலுவலகம் | 500,000.00 | 500,000.00 | 100 |
| 177-1-2-2002 | அமைச்சு நிர்வாகம் | 300,000.00 | 276,743.20 | 92 |
| 177-2-3-2002 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 2,000,000.00 | 1,586,74.96 | 84 |
| | **மொத்தம்** | **2,800,000.00** | **2,362,917.96** | **84** |
| 177-1-1-2003 | அமைச்சர் அலுவலகம் | 2,300,000.00 | 1,270,255.03 | 55 |
| 177-1-2-2003 | அமைச்சு நிர்வாகம் | 2,700,000.00 | 2,223,546.39 | 82 |
| 177-2-3-2003 | கலாசார மேம்பாட்டு அலுவல்கள் | 3,500,000.00 | 3,435,023.23 | 98 |
| | **மொத்தம்** | **8,500,000.00** | **6,928,824.65** | **82** |
| | **முழு மொத்தம்** | **11,300,000.00** | **9,291,742.61** | **82** |

➢ **இணைந்த நிறுவனங்கள், கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கான செலவினத் தொகை**

| செலவின விடயம் | விபரம் | 2012 ஆம் ஆண்டிற்குரிய ஏற்பாடு ரூ. | 2012.12.31 ஆம் திகதியன்று செலவு ரூ. | செலவின வீதம் % |
|---|---|---|---|---|
| **இணைந்த நிறுவனங்களுக்காக செலவான தொகை** | | | | |
| 177-2-3-5-2502 | பகிரங்க நடன கட்டுப்பாட்டுச் சபை | 2,000,000.00 | 566,800.00 | 28 |
| 177-2-3-6-2502 | டவர் ஹோல் டியேட்டர் மன்றம் | 27,000,000.00 | 10,500,000.00 | 39 |
| | **உப மொத்தம்** | **29,000,000.00** | **11,066,800.00** | **38** |
| **பிரதான கருத்திட்டங்களுக்கு செலவான தொகை** | | | | |
| 177-2-3-2001 | கட்டிடம் மற்றும் நிர்மாணம் (கலாசார நிலையங்கள்) | 125,000,000.00 | 113,979,093.94 | 91 |
| 177-2-3-7-2502 | தற்போதுள்ள இணைய வசதிகளை மேம்படுத்துதல் | 1,000,000.00 | 204,911.00 | 20 |
| 177-2-3-8-2502 | வயம்ப கலாசார சதுக்க கருத்திட்டம் | 20,000,000.00 | 15,012,665.00 | 75 |
| 177-2-3-9-2502 | உள்ளூர் மரபுரீதியான அறிவு மற்றும் கலாசார பெறுமதிகளை வெளிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான கருத்திட்டம் | 6,450,000.00 | 2,856,191.85 | 44 |
| 177-2-3-12-2502 | கலாசார நிலைய வசதிகளை மேம்படுத்தல் | 40,000,000.00 | 10,601,848.78 | 26 |
| 177-2-3-15-2502 | எல்பின்ஸ்டன் டியேட்டரை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் | 66,565,000.00 | 19,000,000.00 | 28 |
| 177-2-3-16-2502 | கலாசார செயற்பாடுகளுக்கான தொழில்சார் பயிற்சி நிலையத்தை மேம்படுத்துதல் | 3,000,000.00 | 1,080,625.47 | 36 |
| 177-2-3-17-2502 | வேடவர் கிராமங்களை பாதுகாத்தல் | 10,000,000.00 | 5,551,399.42 | 55 |
| 177-2-3-18-2502 | கலாசார நிலையங்கள் மற்றும் சுனாமி ஆராய்ச்சி நிலையத்தை நிர்மாணித்தல் | 35,000,000.00 | 34,999,683.79 | 100 |
| 177-2-3-18-2502 | சார்க் கலாசார நிலையத்தை நிர்மாணித்தல் | 145,000,000.00 | 110,654,093.38 | 76 |
| | **உப மொத்தம்** | **452,015,000.00** | **313,940,512.63** | **69** |
| **பயிற்சியளித்தலும் திறன் விருத்தியும்** | | | | |
| 177-01-02-2401 | அமைச்சு நிருவாகம் | 600,000.00 | 409,798.00 | 68 |
| 177-02-03-2401 | சமூக கலாசார ஒருங்கிணைப்புப் பணிகள் | 1,500,000.00 | 1,177,564.36 | 78 |
| | **உப மொத்தம்** | **2,100,000.00** | **1,587,362.36** | **76** |
| | **மொத்த கூட்டுத் தொகை** | **358,115,000.00** | **212,615,581.05** | **59** |

**3.2 அரச உத்தியோகத்தாகளின் முற்பண பீ கணக்குடன் தொடர்பான விபரங்கள்**

| கடன் வகை | கடன் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| | | செலவீனத் தலைப்பு ரூபா |
| இடர் கடன் | 117 | 10,121,658.50 |
| பண்டிகை முற்பணம் | 628 | 3,140,000.00 |
| விசேட முற்பணம் | 109 | 272,500.00 |
| வெள்ள நிவாரணக் கடன் | - | - |
| மிதிவண்டி கடன் | 01 | 6,000.00 |
| | **மொத்தம்** | **13,540,158.50** |

# 4. கலாசார மேம்பாடு

## 4.1 கலாசார மேம்பாட்டுப் பிரிவின் கடமைகள்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் செய்முறைப்படுத்துகின்ற அனைத்து கலாசார மேம்பாட்டு நிகழ்சிகளும் கலாசார மேம்பாட்டுப் பிரிவின் மூலம் நடாத்தப்படும். நல்லொழுக்கங்கள் நிறம்பிய ஒரு சமுதாயத்தை உருவாக்கிக்கொள்வதற்கு தேவையான நிகழ்சிகளை திட்டமிடல் மற்றும் செயல்முறைப்படுத்தல் மேம்பாட்டு பிரிவுசார் கடமையாகும். இவ் விடயம் தொடர்பாக நாடு முழுவதும் 160 கலாசார நிலையங்கள் 2012 வரை ஸ்தாபிக்கப்பட்டு தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு இலங்கையினுள் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுக்கும் தலா ஒரு கலாசார நிலயங்களாக ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளது. அதற்கு மேலதிகமாக மத்திய கலாசார நிதியம், கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக் கழகம், டவர்ஹோல் அரங்கு நிதியம் மற்றும் பொது தணிக்கை சபை போன்ற நிறுவனங்களில் அமைச்சுகள் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகள் இப் பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்றது. இதன் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கடமைகன் சார்ந்த அலுவல்களை கலாசார மேம்பாட்டு பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

## 4.2 கலாசார மேம்பாட்டு அலுவல்கள்

**முக்கிய விடயங்கள்**

- பிரதேச மட்டத்தில் கலாசார நிலையங்களை ஸ்தாபித்தல். அவற்றை பராமரித்தல் மற்றும் அதனூடாக திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்.
- நல்லொழுக்கத்துடனான சமுதாயமொன்றை உருவாக்குதல்.
- தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல்.
- கலாசார சங்கங்களை ஸ்தாபித்தல்.

## 4.3 கலாசார நிலையங்கள் வேலைத்திட்டம்

இதன் கீழ் சகல பிரதேச செயலகப் பிரிவுக்கும் தலா ஒரு கலாசார நிலையம் என்ற வகையில் ஸ்தாபிப்பதற்கு எதிர் பார்க்கப்படுகிறது.

**குறிக்கோள்கள்**

- நல்லொழுக்கம் நிறம்பிய சமுதாயத்தை உருவாக்குதல்.
- பிரதேசம் சார்ந்த பிள்ளைகளின் கலைத் திறமைகளை மெருகூட்டல்.
- பாரம்பரிய கலைகளை அதாவது மங்கிச்செல்லும் ஆய கலைகள் அறுபத்து நான்கு அம்சங்களையும் மேம்படுத்தி மெருகூட்டல்
- வெளிநாட்டு நடனக் கலைகளின் நுட்பங்களை, அனுபவங்களை பெற்றுக்கொடுத்து அவர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருதல்.

◈கலாசார மத்தியநிலைய சேவையினை மேலும் விஸ்தீரணப்படுத்தும் நோக்குடன், அந்த நிலையங்களுக்கு வந்துபோக முடியாத போக்குவரத்துப் பிரச்சினையுள்ள கிராமிய மக்களுக்கும், மேற்படி சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அந்த அந்த பிரதேசற்களில் கலாசார சங்கங்கள் அமைத்தல்.

### 4.3.1 கலாசார நிலையங்களால் இலவசமாக பயிற்சியளிக்கும் நுண்கலைகள் மற்றும் ஏனைய பாடநெறிகள

- மேலைத்தேய நடனம்
- கீழைத்தேய நடனம்
- சப்ரகமுவை நடனம்
- கிராமிய நடனம்
- ஆக்கப்பூர்வமான நடனம்
- மேள தாளம்
- கீழைத்தேய இசை
- மேலைத்தேய இசை
- நாடகம் மற்றும் நடிப்புக் கலை
- ஓவியங்களும் சிற்பங்களும்
- முன் பள்ளி
- உடல் உள வளர்ச்
- கைப்பணிகள்
- சிங்கள மொழி
- தமிழ் மொழி
- பாளி மற்றும் சமச்கிறுத மொழி
- ஆங்கில மொழ

2012 ஆம் ஆண்டாகும் போது கலாசார மத்தியநிலையங்களால் பயிற்சி பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 32,280 தாண்டியுள்ளது.

## 4.3.2 கலாசார மத்தியநிலையங்களின் மூலம் தமது பிரதேச மக்களுக்கு ஆற்றி வரும் சேவைகள்

- தேசிய ரீதியான செயற்பாடுகள்
- பிரதேச ரீதியான செயற்பாடுகள்
- பிரதேச சமய நிகழ்சிகள் (வெசக் மற்றும் பொசொன்)
- பிரதேச விசேட நிகழ்சிகள்
- பிரதேச சுகாதார நிகழ்சிகள்

### 4.3.3. தேசிய நிகழ்சிகள்/விசேட நிகழ்சிகள் பொன்றவற்றிற்காக வளங்கக்கக்கூடிய நடன அம்சங்களும் கலைஞர்களும்

| *நடன வகை* | *வழங்கக்கூடிய கலைஞர்களின் எண்ணிக்கை* | |
|---|---|---|
| | நடன உடைககள் / பொருட்கள் | நடனஉடைகள்/பொருட்கள் இல்லாமல் |
| **மேலைத்தேய நடனம்** | | |
| வெஸ் நடனம் | **500** | **1,000** |
| சாஸ்திரீய பெண்கள் | **300** | **1,000** |
| **கீழத்தேய நடனம்** | | |
| கீழைத்தேய நடனம் பெண்கள் | **100** | **400** |
| கீழைத்தேய நடனம் ஆண்கள் | **-** | **500** |
| தெல்மே | **50** | **450** |
| **முகமூடி நடனங்கள்** | | |
| கோளம், சன்னி மற்றும் பாலி - 03 வகைகள் | **60** | **200** |
| **சபரகமுவை நடனம்** | | |
| சபரகமுவை நடனம் பெண்கள் | **200** | **400** |
| சபரகமுவை நடனம் ஆண்கள் | **100** | **250** |
| **கிராமிய நடனம்** | | |
| 20 கிராமிய நடனங்கள் மற்றும் 25 குழுக்களைக் கொண்டதாகும் | | |
| | **40 கலைஞர்கள் அடங்கிய 12 குழுக்கள்** | **50 குழுக்கள்** |
| **மேளதாளக் கலைஞர்கள்** | **1,500** | **2,000** |

## 4.4. ”அங்கம் பொர” சண்டை சிற்பக் கலையை பரவலாக்கல்

**குறிக்கோள்கள்**

இலங்கையில் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றுக்கு உரிமை கூறும் ”அங்கம் பொர” சண்டை சிற்பக் கலையில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் கலைஞர்களை இனங்கண்டு, அக் கலையை பாதுகாத்தல், எதிர் கால சந்ததியினருக்கு ஒப்படைத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாக அமைந்துள்ளது.

இலங்கையில் தற்போது அங்கம்பொர சண்டைக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களை இனம் கண்டு அவர்களை அரச அனுசரணையுடன் ஒன்று சேர்த்து, அவர்ளைக் கொண்டு நாடு முழுவதும் இக்கலையை வியாபித்தலும், அதனை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு புகழ் ஈட்ட வைப்பதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**செயற்பாடுகள் - 2012**

- அங்கம் பொர சண்டை கலை சங்கத்தினருக்கு தேவையான மேளம் மற்றும் தவில் போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தல்
- 2012.02.08 ஆந் திகதி தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது அதன் பிரதான மேடையில் இச்சண்டைக் காட்சிகள் மேடையேற்றப்பட்டன.
- 2012 ஜுன் மாதம் மாத்தறை ஹக்மன பிரதேச சபை விளையாட்டுத் திடலில் அங்கம்பொர சண்டைக் கலை காட்சிப் படுத்தப்பட்டது.

## 4.5 ஆதிவாசிகளின் பொது கலாசாரத்தை பாதுகாக்கப்படும் கருத்திடடம்

வேகமாக அழிவடைந்து செல்லும் ஆதிவாசி மக்களின் இயற்கையுடன் இணைந்திருக்கும் வாழ்க்கை வழிமுறை, மருத்துவ முறைகள் போன்ற பழமையான அறிவு, பழக்க வழக்கங்கள், சாந்தி கர்ம போன்ற சமய வழிமுறைகள், நாட்டார் பாடல்கள், மொழி இலக்கியம், கலைசார் திறமைகள் போன்ற கலாசார அங்கங்கள் அழியாது பாதுகாத்தல் இதன் நோக்கமாகும்.

**அடிப்படையான விடயங்கள் மற்றும் முன்னேற்றம்**

| குறிக்கோள் | செயற்பாடு | கடமைகள் கடமை | முன்னேற்றம்றம் |
|---|---|---|---|
| **1. ஆதிவாசிகளின் கலையம்சங்களைப் பாதுகாத்தல்** | ஆதிவாசிகளின் கலாசாரத் தேவைப்பாடு, கலாசாரப் பார்வை, பழக்க வழக்கங்கள் போன்றன பற்றிய தொல்பொருள் சார் ஆராய்ச்சி | தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிலையம் | தொல்பொருள் சார் ஆராய்ச்சி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது |
| **2. வேகமாக அழிந்து வருகின்ற ஆதிவாசிகளின் கலாசாரத்தைப் பாதுகாத்தல்** | வேடுவர் சமூக மானுடவியல் ஆராய்ச்சி | கொழும்பு பல்கலைக்கழகம் | அளவாய்வு நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது 2011. |
| **3. ஆதிவாசிகளின் பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல்** | 1. ஆதிவாசிகளின் பாரம்பரிய வைத்திய முறை பற்றி அறிதலும் அதனை மேம்படுத்தலும்<br>2. ஆதிவாசிகளின் உணவு முறை பற்றிய ஆய்வும் அதனை மேம்படுத்தலும் | ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் | அளவாய்வு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இவர்களின் மருந்து முகிலிகைகளைப் பயிரிடுவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருமானம் ஈட்டிக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது 2011 |

| | | | |
|---|---|---|---|
| **4.றுனழஉளதனளைமய ஆதிவாசிகளுக்கான வீடமைப்பு** | 1. ரதுகல, பொல்பெத்த மற்றும் கொஞ்சங்குளம் போன்ற கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு 30 வீடுகள் விகிதம் 90 வீடுகளை அமைத்துக்கொடுத்தல். | நிர்மாணப் பொறியியல் சேவை, வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு | 2012.12.31 ஆம் திகதி 66 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. |
| **முன்னெற்றம் 2012** | | | |
| 2012 ஆண்டில் தம்பானை மற்றும் தலுகான கிராமங்களில் அதிவாசிகளுக்காக மேலும் 55 வீடுகள் நிர்மானிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>மஹியங்கனை - தம்பான 25 வீடுகள } மதிப்பிடப்பட்டுள்ள நிதி ரூ. மி. 7.11<br>தம்புலாகல - தலுகான 30 வீடுகள் | | | |
| ◈ திட்டம் 1, 2 மற்றும் 3 குறிக்கோள்களில் குறிப்பட்டுள்ளவற்றின் ஆய்வுகளின் படி பின்வரும் நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.<br><br>1. அ. வெத்தா - வேடரின ஆய்வு, இலக்கிய விமர்சனங்கள் மற்றும் தகவல் சேகரிப்பு(பிரேமகுமார டி சில்வா, சிந்தக ரணசிங்க)<br>2. ஆ. இலங்கை ஆசிவாசிகளின் பாரம்பரிய உரிமைகள் (சுதேச வைத்தய அமைச்சு, கலாசர மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களம்)<br>3. Rock paintings and Engraving Sites in Sri lanka(Raj Somadeva)(PGIAR) | | | |

## 4.6. நாட்டார் இசை பாதுகாப்பு நூலகம்

இலங்கையரின் வாழ்வுடன் இரண்டர் கலந்திருக்கும், தொண்டுதொட்டு நிலவிவரும் நாட்டார் இசை, நாட்டார் பாடல், அவற்றின் ஓசை நயம், புல்லாங்குழல், வண்ணம், அதற்கான பூஜைள் ஹோம யாகங்கள் அதன் ஒலி நயம் போன்ற மரபுரிமைகள் மக்களிடமிருந்து தீவிர அழிவுக்கு உட்படும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளது. இலங்கை கலை, கலாசாரத்தின் அதிவிஷேட அடையாளமான இக் கலை அம்சங்கள் தொடர்பான தகவல்கள், தடயங்கள் அழிந்து போய்விடாமல் பாதகாத்து இனிவரும் சந்ததியினரிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்கள் பயன் பெற வைப்பதும் எமது குறிக்கோளாகும்.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நவீன தொழில்நுட்பத்துடனான கணனிசார் தொழில்நுட்ப உபகரணத் தொகுதியுடன்கூடிய நாட்டார் இசை பாதுகாப்பு நூலகமொன்று ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் மற்றும் கலா பவனம் வளாகத்தில் 2010 செப்தம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்தை ஸ்தாபிப்பதற்கான நிதி உதவிகள் றோயல் நோர்வீஜியா அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### அடிப்படை விடயங்கள்

- தற்போது நாட்டின் பல பிரதேசங்களில் பொது மக்களிடமும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் வசம் இருக்கின்ற மேற்படி கலை அம்சங்களை தேடிக் கண்டு பிடித்து அதன் தகவல்களை, தடயங்களை சேகரித்தல்.
- அத் தகவல்களை டிஜிரல் தொழில்நுட்பம் மூலமாக ஒலிநாடாக்களில் பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல்.
- கற்றல் மற்றும் ஆய்வு முயற்சிகளுக்கு இடமளித்தல்.
- மேற்படி அறிவை மக்கள்மயப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 4.6.1. ஒலி மற்றும் ஒளி அமைப்புக்களின் வளர்ச்சி - (2012)

| | நிறுவனங்கள்/ பிரதேச செயலகங்கள் | ஒலிநாடாக்கள் பதிவுகளின் முன்னேற்றம் | | | ஒலி – ஒளி நாடாக்கள் பதிவுகளின் முன்னேற்றம |
|---|---|---|---|---|---|
| | | கிராமிய பாடல்களின் எண்ணிக்கை | | | |
| | | ஒலிப்பதிவு செய்யப்பட்ட | மீளாய்வு செய்யப்பட்ட | பாதுகாப்பு செய்யப்பட்ட | எண்ணிக்கை |
| 1 | 2011 ஆண்டில் பதிவுசெய்த, திருத்தங்கள் செய்த, பாதுகாப்புச் செய்த நாட்டார் இசை அம்சங்கள் | 1155 | 1265 | 860 | |
| முன்னேற்றம் - 2012 | | | | | |
| 2 | சௌந்தர்ய பல்கலைக்கழகத்தின் கிராமிய இசைப்பிரிவில் இருக்கின்ற பழைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பதிவுசெய்யப்பட்டு களஞ்சியப்படுத்தியிருந்த பதிவு நாடாக்கள் மற்றும் டெட் வகை நாடாக்களைப் பயன்படுத்தி டிஜிடல் முறையில் அவை பாதுகாப்பதும் அதன் இன்னுமொரு பிரதி பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கவும் ஏற்பாடாகியுள்ளது. | 141 | 141 | 141 | |
| 3 | ஹாரிஸ்பத்துவை<br>கண்டி தலதா பெரஹராவின்பிரதம வெஸ் நடனக் கலைஞர் உள்ளிட்ட கலைஞர்களும், பறை முளக்கக் கழலஞர்கள் மற்றும் பெண்களின் கிராமிய பாடல்களில் கைதேர்ந்தவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். | 67 | 67 | 67 | வேலைத்திட்ட 03 சந்தர்ப்பம் |
| 4 | பலபிட்டிய<br>பலப்பிட்டிய பிரதேசத்தின் நாட்டிய நாடகங்கள, நிருத்திய நடனங்கள்களில“ ஈடபட்டிந்த கலஞர்களின் விபரங்கள்சேகரிப்பதும்<br>அந்த இசைவடிவங்களைப் பதிவுசெய்தலும். | 39 | 39 | 39 | 39 |
| 5 | காலி இசை விழா<br>இது கொன்சட் நிறுவனத்தின் சேவா லங்கா நிதியத்தின்ஏற்பாட்டில் காலி காலியில் இடம்பெற்ற நிகழ்ச்சியாகும்.<br>இது நாட்டு மக்கள் அனைவரும்சிங்களம், தமிழ்,முஸ்லிம்களெனக் கலந்து கொண.டனர். அத்தோடு ள்நாட:, வெளிநாட்டு இசைக்குளுக்களும் இதில் இணைந்து கொண்டனர். பல்சுவை விருந்தாக நாடாக்களில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டன. | 38 | 38 | 38 | 38 |
| 6 | நுண்கலைப் பல்கலைக்கழகத்திலிருந்து 15 நாடாக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. | ஒலிநாடாக்கள் 05 | | 5(4GB) | |
| 7 | ஒலிநாடாக்கள் 21 பெற்றுக்கொள்ளப்பட்டன. | 11 | | 11 | |
| 8 | நுண்கலைப் பல்கலைக்கழகத்திலிருந்து 36 நாடாக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. | 5 | 21 | 5 | |
| 9 | ஹங்குரன்கெத<br>நெலும் கவி போன்ற கிராமிய பாடல்கள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான குழல் இசையின் பதிவு | 82 | 71 | 71 | 71 |
| 10 | நுவரெலிய - ஊல் ஓயா தேயிலைத் தோட்ட (தமிழ் கிராமிய கவிதைகள்)<br>நுவரெலிய - ஊல் ஓயா தேயிலைத் தோட்டத்தில் வாழுகின்ற மலையக மக்களின் கொழுந்து பறித்தல் தொடர்பான மலையக கிராமிய பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இவை வட இந்திய இசை வடிவத்தை ஒத்தவை. | 16 | 13 | 13 | 13 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | தம்பான ஆதிவாசி மக்களின் கிராமிய நடனம் மற்றும் தாள வாத்தியம்<br>இலங்கையின் வேடரினத்தி ஹெத்மே எனும் சாந்தி கா்மத்துடன் தொடாபுடைய இசை வடிவம் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. தவில் இசையுடன் சாந்தி கா்மம், இசை ப் பாடல் அடங்குகிறது. மஹியங்கனை பெரஹராவுடன் தொடா்புடைய வேடரின் தொடம் பெரஹரா தொடா்பான வேண்டுகோள் மற்றும் பழக்க வழக்க முறைகள் | சும்பூரண இரவு கண்காட்சி. மீளாய்வில் உள்ளது. | | | (மாலையிலிருந்து இரவு விடிந்த பின்னரும் மறுநாள் மாலை வரை) |
| 12 | மஹியங்கன பெரஹரா தொடர்பான வேடர்களின் தொடங் பெரஹராவும் அதனுடன் தொடா்புடைய கிரியைகளும் | | | | |
| 13 | கம்பஹ பத்தலகெதர சியநே கல்வியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் மாணவர்களுக்காக வானொலி சேவையினை நடத்தியமை<br>கிராமிய இசை வடிவங்களை அம்பலப்படத்தவதும் அதனைப்பாதுகாப்பதும் அதன் நோக்கமாக இருந்தது. பல்சுவை கிராமிய இசை வடிவங்களைக் கொண்ட வானொலி நிழ்ச்சிகள் இடம்பெற்றன. | நேரடி வானொலி நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. | | | |
| 14 | மரு மங்கல்ய எனும் ஹொரண பிரதேசத்தக்கான பலி தொவில் சாந்திகா்ம நிகழ்ச்சி | 08 | - | 06 | 12 மணித்தீ யாலம் 03 கெமராக் காட்சிகள் ((06 மணி. நிகழ்ச்சி) |
